

'தமிழ்நாடு முன்னேற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையே தேவை' என்று உணர்ந்து, கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் – மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி முன்னிலையில், கரூர் அ.தி.மு.க. வர்த்தக அணி மாவட்ட துணைச் செயலாளர் கே.கே.சங்கர் தலைமையில் 50க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினர் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.


தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (11.01.2025) சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் மருத்துவ சுற்றுலா மாநாடு 2025 முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் பி.சந்தரமோகன், கற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நீலகிரி மாவட்டத்தில்

# ரூ.5.22 கோடி மதிப்பீட்டில் 19 திட்டப் பணிகள்!

## ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி. தொடங்கி வைத்தார்!

நீலகிரி, ஜன. 13-

நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் 11.01.2025 அன்று நடைபெற்ற அரசு விழாவில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், ரூ.5.22 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 19 திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, 170 பயனாளிகளுக்கு ரூ.6.15 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இவ்விழாவில், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம், தேனாடு ஊராட்சி, அண்ணாநகரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுநிதியின்கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்தையும், ஜக்கனாரை ஊராட்சி பூபதியூரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்தையும், நெடுகுளா ஊராட்சிக்குட்பட்ட சன்சைன் நகரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுநிதியின்கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்தையும், நடுஹட்டி ஊராட்சி, பாண்டியன் நகரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுநிதியின்கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்தையும், கெட்டிகம்பை நகரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுநிதியின்கீழ்

ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்;டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தையும், நெடுகுளா ஊராட்சி, பாமுடியில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்தையும், காவிலோரையில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ்

ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்தையும், தேனாடு ஊராட்சி, சோலூர்மட்டம் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.26 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கழிவறை மற்றும் காத்திருப்பு கூடத்தையும், கடினமாலா ஊராட்சி, கோத்திமுக்கு பகுதியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.19.20 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டிடத்தையும்,

உதகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தூனேரி ஊராட்சி, அணிக்கொரையில் 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின்கீழ் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார மைய கட்டிடத்தையும், கடநாடு ஊராட்சி, தாவனையில் 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின்கீழ்

ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார மைய கட்டிடத்தையும், நஞ்சநாடு ஊராட்சியில் 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின்கீழ் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் நஞ்சநாடு கிராம துணை சுகாதார மைய கட்டிடத்தையும், பாலகொலா ஊராட்சி, ஓரநள்ளியில் 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின்கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார மையத்தையும்,

கூடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நெலாக்கோட்டை ஊராட்சி 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின்கீழ் கோட்டாடு பகுதியில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார மையத்தையும், சேரங்கோடு ஊராட்சி, அய்யன்கொல்லி பகுதியில் 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின்கீழ் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார மையத்தையும், செரச்சாலின் பகுதியில் 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின்கீழ் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார மையத்தையும், குறிஞ்சி நகரில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ்

ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடத்தையும், மழவன் சேரம்பாடியில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடத்தையும், பிக்கட்டி முள்ளிமலை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் ஊரக பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.46.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வகுப்பறை கட்டிடத்தையும் என மொத்தம் ரூ.5.22 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பல்வேறு பல்நோக்கு கட்டிடங்கள், அங்கன்வாடி மைய கட்டிடங்கள், வகுப்பறை கட்டிடங்கள், துணை சுகாதார மைய கட்டிடங்கள் என 19 முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்கு நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் 78 பயனாளிகளுக்கு ரூ.47.47 இலட்சம் மதிப்பில் (8 கிராம் 22 காரட்) தங்க நாணயமும், ரூ.33.25 இலட்சம் நிதியுதவித் தொகையும் என மொத்தம் ரூ.80.72 இலட்சம் மதிப்பீட்டிலும், தமிழ்நாடு ஊரக ஃ நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் 5 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் வங்கி கடன் பெறுவதற்கான ஆணைகளையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.13,380%- மதிப்பில் தையல் இயந்திரங்களையும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் 6 பயனாளிகளுக்கு ரூ.4.20 இலட்சம் மதிப்பீட்டில் நுண்தொழிற்கடன் பெறுவதற்கான காசோலைகளையும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நலத்துறை சார்பில் நிதி ஆதரவு திட்டத்தின்கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ. 72,000/- மதிப்பில் வைப்பு பத்திரங்களையும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் சார்பில் உதகை ஊராட்சி ஒன்றியத்தில் பழங்குடியினர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தின்கீழ் தலா ரூ.4.95 இலட்சம் வீதம் 15 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.74.31 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கான சாவிகளையும், பிரதம மந்திரி ஜென்மன் திட்டத்தின்கீழ் தலா ரூ.5.73 இலட்சம் வீதம் 6 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.34.38 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கான சாவிகளையும், கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் பிரதம மந்திரி ஜென்மன் திட்டத்தின்கீழ் தலா ரூ.5.73 இலட்சம் வீதம் 11 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.63.03 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கான சாவிகளையும், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தில் பிரதம மந்திரி ஜென்மன் திட்டத்தின்கீழ் தலா ரூ.5.73 இலட்சம் வீதம் 44 பயனாளிகளுக்கு மொத்தம்

ரூ.2.52 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கான சாவிகளையும், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்தில் பிரதம மந்திரி ஜென்மன் திட்டத்தின்கீழ் ரூ.5.73 இலட்சம் மதிப்பில் 1 பயனாளிக்கு கட்டப்பட்டுள்ள வீட்டிற்கான சாவியினையும் என மொத்தம் 77 பயனாளிகளுக்கு ரூ.3.98 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட வீடுகளுக்கான சாவிகளையும் என ஆக மொத்தம் மாவட்டத்தில் உள்ள 170 பயனாளிகளுக்கு ரூ.6.15 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு அரசு, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சித்திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களை அறிவித்து, அதனை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள், நமது மலை மாவட்டமான நீலகிரி மாவட்டம் மீது தனிகவனம் செலுத்தி, அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். டேன்டீ தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை முதலமைச்சர் அவர்கள் கருணையுடன் பரிசீலித்து, பண்டிகை கால ஊக்கத்தொகையினை பழைய நிலுவைத் தொகையுடன் சேர்த்து வழங்கினார்கள். அதுமட்டுமல்லாமல், நமது மாவட்டத்தில், பேரிடர் ஏற்படும்போதெல்லாம் உடனடியாக எங்களை தொடர்புக் கொண்டு, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தி வருகிறார்கள். மேலும், கூடலூர் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான செக்சன் 17 நிலப்பிரச்சனை குறித்து 2 அல்லது 3 மாதங்களுக்குள் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்றைய தினம் கூட முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில், மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு அறிவிப்பு வெளியிட்டுள்ளார்கள். இதுபோல் பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திவரும் முதலமைச்சர் அவர்களின் சிறப்பாக ஆட்சிக்கு பொதுமக்கள் தங்களது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, துணை முதலமைச்சர் அவர்களால் புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வழங்கப்பட்ட மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பரிசுப் பொருட்களை மகளிர் திட்ட இயக்குநர் அவர்கள் மூலம் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

இவ்விழாவில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், உதகை நகரமன்றத்தலைவர் திருமதி. வாணீஸ்வரி, முன்னாள் கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் திராவிட மணி, மகளிர் திட்ட இயக்குநர் திரு. காசிநாதன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.பிரவீணா தேவி, வாழந்து காட்டுவோம் திட்டம் செயல் அலுவலர்வசந்த், உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அண்ணாதுரை, சுரேஷ் உட்பட அரசுத் துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**செங்குன்றம் மிசா இரா. ஏழுமலை**
**சனவரி 13 (2005)**



கழக துவக்கக் காலத்திலிருந்தே உறுப்பினராகி, கழகப் பணியாற்றி வந்த இவர், கழகப் பொதுக்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தார்.

நாரவாரிக்குப்பம் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும் – பேரூராட்சித் தலைவராகவும் பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்ற இவர், நெருக்கடிக் காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

"சட்டமன்றத்தில் இடம் கிடைக்காவிட்டாலும், கலைஞர் இதயத்தில் எப்பொழுதும் ஏழுமலை அவர்களுக்கு இடமுண்டு." என்று பொதுச்செயலாளர் பேராசிரியரால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


### விழுப்புரம் தெற்கு மாவட்டம் முழுவதும்

# தமிழர் திருநாள் பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடுவீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதம சிகாமணி அறிக்கை!



விழுப்புரம், ஜன. 13-

விழுப்புரம் தெற்கு மாவட்ட மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன். கௌதமசிகாமணி அவர்களின் அறிக்கை வருமாறு:-

தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு 14. 01.2025 , செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் தலைமையில் , மாவட்ட கழக செயலாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி முன்னிலையில் சமத்துவப் பொங்கல் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

வரும் 15.01.2025 புதன்கிழமை திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு கழக துணைப் பொதுச் செயலாளர் வனத் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி , மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் காலை 8 மணிக்கு விழுப்புரம் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள " செந்நாப்புலவர் "திருவள்ளுவர் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்கிறார்.

தமிழர் திருநாள் நிகழ்வுகள் அனைத்திலும் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் என கழகத்தினர் அனைவரும் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறேன்.

இவ்வாறு டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


மன்னார்குடி வர்த்தக சங்கத் தேர்தலில் வெற்றிபெற்று தலைவராக தெரிவுசெய்யப்பட்ட கழக அயலக அணி மாவட்ட அமைப்பாளர் ஆர்.வி. ஆனந்த் தமிழக அரசின் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவை சந்தித்து வாழ்த்துப் பெற்றார். மேலும் வர்த்தக சங்க பொதுச் செயலாளராக கே.. சரவணன், பொருளாளராக டி. ஜெயச்செல்வன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.


## கலைஞரின் புத்தக வெளியீட்டு விழா




**பாரதி நிலையம் சார்பில்**
**கலைஞரின் குறளோவியம்**
**வெளியீடு! சென்னை நந்தனம்**
**ஓய்.எம்.சி.ஏ. புத்தகக் கண்காட்சி**
**வெளியிட்டவர்**
**திரு. நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள்**
**முதல் பிரதி பெற்றவர்:**
**திரு. கே.லோகநாதன் அவர்கள் (கல்வியாளர்)**
12.01.2025 ஞாயிறு காலை **11:00 மணி** அளவில் அரங்க எண் 156 / 157–ல்
**நடைபெற்றது.**

புத்தகம் பெற ₹550 வங்கி கணக்கில் செலுத்தவும்.

Union Bank of India
West Mambalam Branch,
Chennai -600033
Bharathe Nilayam,
A/C NO:611701010050744
IFSC CODE:UBIN0561177
Cell GPAY: 9345087356

முன்பதிவு செய்பவர்களின்
பெயர் ..........
முகவரி ..........
..........
செல் நம்பர்..........
தெளிவாக குறிப்பிடவும்